ஆ.தெக்கூர்,கீழச்சிவல்பட்டியில்

இன்று மின்தடை

திருப்புத்தூர், பிப்.12: திருப்புத்தூர் அருகே ஆ.தெக்கூர், கீழச்சிவல்பட்டி பகுதிகளில் இன்று மின்தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்புத்தூர் கோட்டத்திற்குட்பட்ட ஆ.தெக்கூர், மற்றும் கீழச்சீவல்பட்டி ஆகிய துணை மின் நிலையங்களில் இன்று பிப்.12ம் தேதி மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகிறது. இதனால் ஆ.தெக்கூர் துணை மின் நிலையத்தில் இருந்து மின் வினியோகம் செய்யப்படும் முக்கிய ஊர்களான ஆ.தெக்கூர், நெற்குப்பை, கண்டவராயன்பட்டி, கொண்ணத்தான்பட்டி, துவார், முறையூர், எஸ்.எஸ்.கோட்டை, மகிபாலன்பட்டி, பூலாங்குறிச்சி, செவ்வூர், திருக்களாம்பூர், வார்ப்பட்டு, கொன்னிவயல், தேவன்பட்டி, தட்சன்பட்டி மற்றும் இதைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளிலும், கீழச்சீவல்பட்டி துணை மின் நிலையத்தில் இருந்து மின்விநியோகம் செய்யப்படும் முக்கிய ஊர்களான விராமதி, இளையாத்தங்குடி, கீழச்சிவல்பட்டி, ஆவிணிப்பட்டி, கீரணிப்பட்டி, சிறுகூடல்பட்டி, நெடுமரம் மற்றும் இதைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளிலும் இன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின் வினியோகம் இருக்காது என்று திருப்புத்தூர் துணை மின் நிலையத்தின் செயற் பொறியாளர் மொண்டி தெரிவித்துள்ளார்.

▶ சிங்கம்புணரி பகுதியில் விற்பனைக்கு வந்துள்ள தர்பூசணி பழங்கள்.

சிங்கம்புணரியில்

விற்பனைக்கு வந்துள்ள தர்பூசணி பழங்கள்

சிங்கம்புணரி, பிப்.12: சிங்கம்புணரி காரைக்குடி சாலையில் கோடை காலம் தொடங்குவதை முன்னிட்டு தர்பூசணி பழங்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பகலில் வெயில் அதிகமாகவும், இரவில் குளிர்ச்சியும் நிலவி வருகிறது. தொடர்ந்து வெயில் அதிகரித்து வருவதால் மக்கள் குளிர்ச்சியான உணவுப் பொருட்களை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். அதன்படி தர்பூசணி பழம் தண்ணீர் தாகத்தை தணிக்கவும், குளிர்ச்சியையும் ஏற்படுத்துவதால் அதிகளவில் இப்பழங்களை மக்கள் வாங்கி செல்கின்றனர். தர்மபுரி, விருத்தாச்சலம், ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து இப்பழங்களை வியாபாரிகள் கொள்முதல் செய்து சிங்கம்புணரி பகுதிகளில் விற்பனை செய்து வருகின்றனர்.

கிலோ 30 ரூபாய் வீதம் பழங்கள் விற்பனை ஆவதால், பொதுமக்கள் வெயிலை சமாளிக்க அதிகளவில் தர்பூசணி பழங்கள், கரும்புச்சாறுகள், இளநீர் ஆகியவற்றை ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர்.

சிவகங்கை திமுக சார்பில்

மாட்டு வண்டி பந்தயம்

▶ சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக சார்பில் மாட்டுவண்டி பந்தயம் நடைபெற்றது.

சிவகங்கை,பிப்.12: சிவகங்கையில் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாட்டு வண்டி பந்தயம் நடைபெற்றது. ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அழகுசுந்தரம் வரவேற்றார். பின்னர் பந்தயத்தினை ஒன்றிய செயலாளர் ஜெயராமன், நகர் செயலாளர் துரை ஆனந்த் ஆகியோர் கொடியசைத்து துவங்கி வைத்தார்.

இதில் சிவகங்கை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த மாடுகள் கலந்து கொண்டன. இதனை தொடர்ந்து சிவகங்கை மதுரை சாலையில் பெரிய மாட்டில் 22 ஜோடிகளும். சின்ன மாட்டில் 63 ஜோடிகளும் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற பெரியமாட்டிற்கு முதல் பரிசு ரூ.25 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.20 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.16 ஆயிரமும், சின்ன மாட்டிற்கு முதல் பரிசு ரூ.20 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.16 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.12 ஆயிரம் வழங்கப்பட்டது.

இதில் ஒன்றிய செயலாளர் ராஜாமணி, யூனியன் சேர்மன் மஞ்சுளா பாலசந்தர், ஒன்றிய துணை செயலாளர் பஞ்சவர்ணம், மாவட்ட பிரதிநிதி மனோகரன், தியாகராஜன், ஒன்றிய பொருளாளர் பாண்டியராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட திமுக தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், இளைஞர் அணி அமைப்பாளர் தங்கச் செல்வம், மாணவரணி அமைப்பாளர் ராம்குமார், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மதியழகன், சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் திருமலை குமணன் உட்பட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காலநிலை மாற்றம் பயிலரங்கம்

சிவகங்கை,பிப்.12: சிவகங்கையில் தமிழ்நாடு வனத்துறை, தமிழ்நாடு காலநிலை மாற்றம் இயக்கம் சார்பில் மாவட்ட அளவிலான காலநிலை மாற்றம் குறித்த பயிலரங்கம் நடந்தது. கலெக்டர் ஆஷா அஜித் தலைமை வகித்தார். மாவட்ட வன அலுவலர் பிரபா முன்னிலை வகித்தார். பின்னர் கலெக்டர் ஆஷா அஜித். மஞ்சள் பையினை வழங்கி பேசினார். இதில் காலநிலை மாற்றம் குறித்து உலகம் முழுவதும் பல ஆண்டுகளாக பேசி வந்த நிலையில் அதற்கு என தனி துறையினை அமைத்து இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. மேற்கத்திய நாடுகள் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சைக்கிள் மற்றும் பொது போக்குவரத்தை அதிகம் பயன்படுத்துவதாகவும், இதனை அரசியல் தலைவர்களும் பின்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். தற்போதைய நிலை நீடித்தால் மக்கள் தொகை பெருக்கம் உயர்ந்து கொண்டே செல்லும். இதனால் அனைவரோடு இணைந்து சுற்றுச்சூழலை பாதுகாக்க அன்றாட நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றார்.

இதனை தொடர்ந்து பூவுலகின் நண்பர்கள் பிரபாகரன், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் விக்னேஷ்குமார், திவ்யா சுபாஷ்குமார், நீர் பாதுகாப்பு மன்ற நிறுவனர் கிருஷ்ணன், ஈரநில நிபுணர் முனைவர் திருமுருகன் ஆகியோர் காலநிலை மாற்றம் சிவகங்கை மாவட்டத்தில் காலநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகள் நீர்பாதுகாப்பு, காலநிலை மாற்றத்திற்கான செயல்திட்டம் உருவாக்குதல் பற்றி பேசினர்.

▶ சிவகங்கையில் நடந்த காலநிலை மாற்றம் குறித்த பயிலரங்கத்தில் கலெக்டர் ஆஷா அஜித் பேசினார்.

வேளாண்மை பட்ஜெட் தொடர்பாக

விவசாயிகள்-அமைச்சர் கலந்துரையாடல்

▶ சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மை பட்ஜெட் தொடர்பாக விவசாயிகள், அமைச்சரிடம் காணொளி காட்சி மூலம் கலந்துரையாடல் நடந்தது.

சிவகங்கை,பிப்.12: சிவகங்கை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் வேளாண்மை பட்ஜெட் தொடர்பாக வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விவசாயிகளின் கலந்துரையாடல் நடந்தது. வேளாண்மை துணை இயக்குநர் சுருளிமலை தலைமையிலும், உதவி இயக்குநர் பரமேஸ்வரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து விவசாய பிரதிநிதிகளான சேங்கைமாறன், ஆதிமூலம், அய்யாச்சாமி, நேரடியாக காவிரி குண்டாறு இணைப்புத் திட்டம் நிதி ஒதுக்கீடு செய்யவும், விவசாய நிலங்களில் சீமைக் கருவேல மரங்களை ஒழித்து சாகுபடி செய்ய தனி திட்டம் அமைக்கவும், பருத்தி பயிருக்கு கொள் முதல் நிலையம் அமைக்கவும், நீண்ட இலை பருத்தி புதிய ரகங்கள் வேளாண்மைத்துறை துறையின் மூலம் வழங்கவும், வெற்றிலை சாகுபடிக்கு அரசு சார்பில் சிறப்பு திட்டமும், ஆராய்ச்சி மையமும் அமைக்க வேண்டி வேளாண்மை அமைச்சரிடம் கூறினர்.

இதில் முன்னோடி விவசாயிகள் ராமலிங்கம், ஆப்ரகாம், மாரி, அங்குசாமி, நாகநாதன், சமயத்துரை கலந்து கொண்டனர்.

திருப்புவனத்தில்

வடமாடு மஞ்சுவிரட்டில் காளையை மடக்கிய வீரர்கள்

திருப்புவனம்,பிப்.12: திருப்புவனத்தில் தமிழ்மாநில காங்கிரஸ் கட்சி சார்பில் ஆண்டு தோறும் வடமாடு மஞ்சுவிரட்டு நடந்து வருகிறது. திருப்புவனம் மாரியம்மன் கோயில் அருகே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ்நாடு வடமாடு மஞ்சுவிரட்டுப் பேரவை சார்பாக வருடம் தோறும் வடமாடு மஞ்சுவிரட்டு நடத்துவது வழக்கம். இந்தாண்டு மஞ்சுவிரட்டு போட்டிகள் நேற்று காலை தொடங்கியது. மொத்தம் 15 காளைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஒரு காளைக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. ஒன்பது வீரர்கள் காளையை 20 நிமிடங்களுக்கு அடக்க வேண்டும். காளையின் கழுத்தில் கயிறு கட்டப்பட்டிருக்கும். மறுமுனை மைதானத்தின் மையப்பகுதியில் உள்ள இரும்பு கம்பியில் பிணைக்கப்பட்டிருக்கும்.

காளையால் ஒரு சுற்றளவிற்கு மேல் செல்ல முடியாது. ஒன்பது வீரர்களும் இணைந்து காளையை அடக்க வேண்டும். மதுரை, ராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாடுபிடி வீரர்கள் போட்டியில் பங்கேற்றனர். வீரர்கள் காளையை 15 நிமிடம் போக்கு காட்டி அலைக்கழித்து கடைசி நேரத்தில் பிடித்து மடக்கினர். மாடு பிடித்த வீரர்களுக்கு ரூ.7 ஆயிரம் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டன. பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கு ரூ.7 ஆயிரமும் பரிசுகள் வழங்கப்பட்டன. முன்னதாக காளைகளுக்கு மாலை அணிவித்து வேட்டி, துண்டுகள் அணிவிக்கப்பட்டன. மாலை மூன்று மணி வரை போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மாநில தொண்டரணி அமைப்பாளர் அயோத்தி, வடமாடு மஞ்சுவிரட்டு மாநில துணை தலைவர் பாரத்ராஜா செய்திருந்தனர்.

பரிசுகளை மதுரை பார்க் பிளாசா உரிமைளார் தொழில் அதிபர் நவநீத கிருஷ்ணன், த.மா.கா மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியன், ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் ராஜசேகரன், வடமாடு மஞ்சுவிரட்டு பேரவை மாநில தலைவர் அந்தோணி முத்து, செல்வக்குமார் ஆகியோர் வழங்கினர். முன்னதாக காளைகளுக்கும் மாடுபிடி வீரர்களுக்கும் கால்நடை மருத்துவ குழு சார்பாக பரிசோதனைகள் நடத்தப்பட்ட பின் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டனர்.

டிஎன்பிஎஸ்சி குரூப் 4 தேர்வுக்கு

இலவச பயிற்சி வகுப்பு

காரைக்குடி, பிப்.12: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் டிஎன்பிஎஸ்இ குரூப் 4 தேர்வை எழுத இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்பட உள்ளது என பதிவாளர் செந்தில்ராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலமாக நடத்த உள்ள குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்காக எழுத்து தேர்வு ஜூன் 9ம் தேதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தேர்வை எழுத இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வரும் 28ம் தேதி கடைசி நாள்.

இத்தேர்வை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில் பல்கலைக் கழக தன்னார்வ பயிலும் வட்டம் சார்பில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் பழனியப்பா செட்டியார் நினைவரங்கத்தின் தரைத்தளத்தில் உள்ள தன்னாவ பயிலும் வட்டத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடத்தப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

மஞ்சள் பை விழிப்புணர்வு

இளையான்குடி, பிப்.12: இளையான்குடி வருவாய்த்துறை சார்பில் மஞ்சள் பை விழிப்புணர்வு முகாம், புனித அன்னாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடைபெற்றது. முகாமிற்கு தாசில்தார் கோபிநாத் தலைமை தாங்கினார். பள்ளி தலைமை ஆசிரியர் சகோதரி அமலி, இயற்கை ஆர்வலர் மாலிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் தீமைகள், சுகாதாரக்கேடு குறித்தும் மஞ்சள் பை பயன்பாட்டால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கி பேசப்பட்டது.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்

CIN.U67100TZ2014PTC020363

கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028. மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com,

அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: +91 98840 62068/+ 91 93446 84194

[பிற்சேர்க்கை–IV–A]

[விதி 8(6) r/w 9(1) விதிகளை காணவும்]

அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தார்ர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது. ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஓஏ.ஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் கவாதமம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஓஏ.ஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) எடெல்வீஸ் வீட்டுவசதி நிதி லிமிடெட் (உரிமையீந்தோர்) வசமிருந்து 26.02.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏ.ஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மிட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏ.ஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மிட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உ.ப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஓஏ.ஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மிட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசொரா அடிப்படை"மில்;** சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தார்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர்	திருமதி. லட்சுமி P, க/பெ, திரு. M. பழனிவேல்ராஜன் மற்றும் திரு. M. பழனிவேல்ராஜன் த/பெ. முனியாண்டி
கடனீட்டுச் சொத்து விவரங்கள்	**விற்பனை பத்திர ஆவணம் எண். 3144/2018 நாள் 20.08.2018 சார் பதிவாளர் அலுவலகம் திருப்பரங்குன்றம் மூலம் திருமதி. லட்சுமி P, க/பெ, திரு. M. பழனிவேல்ராஜன் அவர்களுக்கு சொந்தமான சொத்து** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், திருப்பரங்குன்றம் சார் பதிவு மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், தற்போது மதுரை மேற்கு வட்டம், விளாச்சேரி கிராமம், புஞ்சை சர்வே எண்.365/15, அளவீடு: 52 சென்ட்கள் மேற்கு பக்கம், 19 சென்ட்கள் தெற்கு பக்கம், 3 சென்ட்கள் கிழக்கு பக்கம். கதவு எண்.3/94, 3/94A எண்ணில் உள்ள ஆர்சிசி கட்டிடத்தின் நான்கு எல்லைகள் கீழ்வருமாறு: வடக்கில்: கிருஷ்ணமூர்த்தி மனை மற்றும் வீடு மற்றும் 3 அடி சந்து, கிழக்கில்: வடக்கு தெற்கு நடைபாதை, தெற்கில்: சந்தனம்மாள் வீடு, மேற்கில்: அழகர்சாமி மனை மற்றும் வீடு, இதனிடையில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.32 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்.32 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்.20 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்.20 அடி. மொத்தம் 640 ச.அடி நிலத்தில் ஆர்சிசி கட்டிடத்துடன் கதவு சட்டம், கதவுகள், கப்போர்ட்ஸ் மின் இணைப்பு எண்.05–144–016–426, 05–144–016–295 மற்றும் அதற்குரிய வைப்புத் தொகை, தண்ணீர்க்குழாய், கழிவறை, குளியலறை, கீழ்பகுதி, மேல்பகுதி, காலி இடங்கள் மற்றும் அனைத்து பயன்பாட்டுதன்மைகள் அடங்கிய சொத்து.
சொத்து உரிமையாளர்	திருமதி. லட்சுமி P, க/பெ, திரு. M. பழனிவேல்ராஜன்
கோரிக்கை அறிவிப்பு நாள்	04.04.2022
கையக சுவாதீனம் நாள்	18.10.2023
நிர்ணய விலை(இலட்சத்தில்)	ரூ.14,00,000/– (ரூபாய் பதினான்கு லட்சம் மட்டும்)
முன்வைப்புத் தொகை	ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்
ஏலம் உயர்த்தும் தொகை	ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)
சொத்தைப் பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:	27.02.2024 பிற்பகல் 3.00 முதல் 5.00 வரை
10.02.2024 தேதியின்படி நிலுவைத் தொகை	ரூ.31,69,497/– (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நானூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)
கணக்கு விவரங்கள்:	**கணக்கு எண்.**344905000929, **பயனாளரின் பெயர்:** ஓம்காரா பிஎஸ்22/2020–21 ட்ரஸ்ட், **வங்கியின் பெயர்:**ஐசிஐசிஐ பேங்க், **கிளை:** பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC Code:ICIC0003449
மின்–ஏலம் நாள் & நேரம்	20 மார்ச் 2024 புதன் கிழமை நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 1.00 வரை.
ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்	18 மார்ச் 2024 பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஓஏ.ஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குனர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பைப் படிக்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 11.02.2024 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 30 (முப்பது) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(கார்த்தி கோவிந்தசாமி)
கைபேசி எண்.9344684194
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்.
(ஓம்காரா பிஎஸ் 22/2020–21 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 12.02.2024
இடம்: சென்னை

ரயில்வேகேட் மூடப்படுவதால்

நீண்ட வரிசையில் காத்திருக்கும் வாகனங்கள்

மானாமதுரை, பிப்.12: மானாமதுரை அண்ணா சிலை அருகே ரயில்வேகேட் ரயில் வரும் நேரம் மூடப்படுவதால் நீண்ட வரிசையில் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வாக சுரங்க பாலம் அமைக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானாமதுரை ரயில்வே நிலையம் மதுரை கோட்டத்தில் முக்கிய சந்திப்பாக விளங்குகிறது. மதுரை, ராமேஸ்வரம், விருதுநகர், காரைக்குடி என நான்கு மார்க்கங்களாக தினமும் ரயில்கள் இயக்கப்படுகின்றன. குறிப்பாக ராமேஸ்வரத்தில் இருந்து சென்னைக்கு தினமும் இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்களும் வடமாநிலங்களான காசி, பிரயாக்ராஜ், மண்டுவாடி, புவனேஸ்வர், அஜ்மீர் உள்ளிட்ட நகரங்களுக்கு தினமும் ஒரு எக்ஸ்பிரஸ் ரயிலும் இயக்கப்படுகிறது.

விருதுநகர் மார்க்கமாக செங்கோட்டையில் இருந்து சென்னைக்கு தினமும் ஒரு எக்ஸ்பிரஸ் ரயிலும் இயக்கப்படுகிறது. இது தவிர கன்னியாகுமரி, கோவை, ஹூப்ளி உள்ளிட்ட நகரங்களுக்கும் ராமேஸ்வரத்தில் இருந்து மதுரை வழியாக எக்ஸ்பிரஸ் ரயிலும் இயக்கப்படுகிறது.

இவ்வாறு அனைத்து ரயில்களும் ரயில் நிலையத்திற்கு வந்து செல்லும் வழியில் அண்ணாசிலை, ஆனந்தபுரம் பைபாஸ், பழைய பஸ் ஸ்டாண்டு உள்ளிட்ட இடங்களில் ரயில்வே கேட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அண்ணாசிலை ரயில்வே கேட் நகருக்கு மிக அருகில் இந்த கேட் அமைக்கப்பட்டுள்ளதால் ஒருமுறை ரயில் வந்து செல்வதற்குள் நீண்ட வரிசையில் வாகனங்கள் இருபுறமும் நிற்கின்றன. அவசர அவசிய தேவைகளுக்காக மானாமதுரை நகருக்குள் வரும் வாகனங்களும் வெளியே செல்லும் வாகனங்களும், ஆம்புலன்ஸ் போன்ற உயிர் காக்கும் வாகனங்களும் இந்த சிரமங்களை சந்திக்க வேண்டிய நிலை உள்ளது. கொரோனா காலத்திற்கு பின் ரயில் சேவைகளை குறைத்துள்ள ஒன்றிய அரசு பாம்பன் பால வேலைகள் முடிந்த பின் மீண்டும் கூடுதலாக ரயில்களை இயக்க உள்ளது. இதனால் தற்போதைய போக்குவரத்து நெரிசலை போல இரண்டு மடங்கு கூடுதலாக வாய்ப்புள்ளது. இதனால் மானாமதுரை பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாவார்கள். எனவே அண்ணாசிலை ரயில்வே கேட் அருகே வைகை ஆறு செல்வதால் ரயில் பாதையின் கீழே சுரங்க பாலம் அமைக்க வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

சமூக ஆர்வலர் பெரிய சாமி ராஜா கூறுகையில், மானாமதுரை அண்ணா சிலை ரயில்வே கேட் வழியாக சிவகங்கை, தாயமங்கலம், இளையான்குடி, பரமக்குடி, மல்லல், காளையார்கோயில் பகுதிகளுக்கு செல்லும் முக்கிய சாலைகள் இருப்பதாலும் கீழ்கரையில் உள்ள 15 வார்டுகளில் வசிக்கும் பொதுமக்கள், கல்குறிச்சி, மாங்குளம், செய்களத்தூர். சூரக்குளம்பில்லறுத்தான் என பத்துக்கும் மேற்பட்ட ஊராட்சி மக்கள் இந்த ரயில்வே கேட்டை கடந்து செல்கின்றனர். மிக அதிக போக்குவரத்துள்ள இந்த கேட் மூடப்படும்போது நூற்றுக்கணக்கான வாகனங்கள் நிற்கின்றன. ரயில் சென்றபின் கேட் திறக்கும்போது 15 நிமிடங்களுக்கு மேல் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே இங்கு சுரங்கபாதை அமைக்கவேண்டும் என்றார்.

சுரங்க பாலம் அமைக்க கோரிக்கை

▶ மானாமதுரை அண்ணாசிலை அருகே ரயில்வேகேட் மூடப்பட்டதால், நீண்ட வரிசையில் வாகனங்கள் நிற்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.